TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~

(Under Section 173 BNSS) C 8129323

1. District மாவட்டம் : ஈ.ரோடு PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு ஈ.ரோடு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 03/AC/2024 Date நாள் 05.07.24

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: amended by the PC Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 04.07.2024 Date to : நாள் வரை 04.07.2024
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 18.00 மணி முதல் Time to : நேரம் வரை 23.45 மணி வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.07.2024 Time : நேரம் 03.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D.V01-II Time : நேரம் 05.07.2024 03.00 மணி மற்றும் 05.07.24 03.15 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சித்துறை, 5-வது தளம், பழைய கட்டிடம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ஈ.ரோடு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.ஸ்.ஜெகதீசன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சுப்பாரெட்டி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 56 Years
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் தணிக்கை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி தணிக்கை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சேலம், ஈ.ரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள், கோயம்புத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. T. மோகன் பாபு, உதவி செயற்பொறியாளர், (ஊரக வளர்ச்சி), கோபிசெட்டிபாளையம், பொறுப்பு ஈ.ரோடு உபகோட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties st... / involved (A... separat... y) ———
களவாடப்ப... ...வரம் (தே... தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : ———
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ———

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தனித்தாளில் கணினியல் தட்டச்சு செய்து — இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

05/7/2024 — 5/7/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.07.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.00 மணி)

Name: பெயர் G. ஆறுமுகம்.
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ..........
உள.நு.க.பிரிவு, மா.ஈரோடு

Attachment to Column 12 of Erode V&AC, Cr.No.03/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018

சமர்பிக்கப்படுகிறது:

இன்று 05.07.2024 ஆம் தேதி 03.00 மணிக்கு திரு.எஸ். ஜெகதீசன், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள், கோயம்புத்தூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்: திரு.எஸ். ஜெகதீசன், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள், கோயம்புத்தூர். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈரோடு. ந.க.எண்.124/2024/ஐ1, நாள்.05.07.2024 அய்யா, நேற்று 04.07.2024-ம் தேதி வியாழக்கிழமை திரு.T.மோகன்பாபு, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி துறை, 5-வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு அவர்கள் ஈரோடு ஊராட்சிகளுக்கு உட்பட்ட கட்டிட வேலைகள் / சாலைப்பணிகள் ஒப்பந்தத்தில், ஒப்பந்ததாரர்கள் செய்த பணியினை தொழில்நுட்ப அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்து பட்டியல் தொகை விடுவிப்பதற்காக ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாக கமிசன் தொகை வசூல் செய்துவருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என் தலைமையில் ஈரோடு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திரு.கோ.ஆறுமுகம் மற்றும் காவல் குழுவினருடன் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் பழைய கட்டிடத்தில் உள்ள ஐந்தாவது தளத்தில் கிழக்கு கடைசியில் தெற்கு பார்த்தவாறு அமைந்துள்ள ஈரோடு உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சித்துறை, ஈரோடு உபகோட்டம் அலுவலகத்தில் 18.00 மணிமுதல் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தில் இருந்த

திரு.T.மோகன்பாபு, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி துறை அவர்களிடம் ஒப்பந்ததாரர்களிடம் பெறப்பட்ட லஞ்சப்பணம் பற்றி விசாரித்தபோது அவர் மேஜையின் வலதுபக்க டிராயரிலிருந்து பணம் ரூ.6000/-, ரூ.13,000/-, ரூ.10,000/-, ரூ.6,000/- மற்றும் அவர் அணிந்திருந்த சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.3,000/-மும், தான் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.20,500/-மும், ஆகமொத்தம் ரூ.58,500/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் ரூ.58,500/-ஐ பற்றி விசாரித்தபோது, டெண்டர் வேலைகள் எடுத்த ஒப்பந்ததார்கள் அவர்களின் பில் பாஸ் செய்வதற்காக இன்று மாலை ஒப்பந்ததார்கள் தனக்கு கொடுத்த பணம் என்றும், யார்யார் கொடுத்தார்கள் என்ற விபரம் தற்போது தனக்கு ஞாபகம் இல்லை என்றும் கூறினார். எனவே மேற்படி பணம் ரூ.58,500/- லஞ்சப்பணம் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் அவர் எதிரில் அமர்ந்திருந்த திரு.சி.நவநீதகிருஷ்ணன் (வயது-44), த/பெ சின்னசாமி, 92 சென்னப்பநாய்கன்பாளையம், சின்னியம்பாளையம் அஞ்சல், மொடக்குறிச்சி வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவரை விசாரித்தபோது, தான் அரசு காண்டிராக்ட் வேலைகளை பஞ்சாயத்து மூலம் எடுத்து செய்து வருவதாகவும், தான் கஸ்பாபேட்டை ஊராட்சியில், செல்லப்பன்பாளையம் 3வது தெரு பகுதியில் ரூ.8.79 லட்சம் மதிப்பிலான கான்கிரீட் ரோடு கடந்த ஏப்ரல் மாதம் போட்டு முடித்து விட்டதாகவும், மேலும் தான் தனது தம்பி திரு.லோகநாதன் என்பவர் பெயரில் எடுத்துள்ள 46 புதூர் ஊராட்சி, ஆணைக்கல்பாளையத்திலிருந்து கரும்பாலை செல்லும் தார் சாலை ரூ.22,81,685/- மதிப்பில் டெண்டர் எடுத்து மேற்படி தார் சாலை 30.06.2024 ஆம் தேதியன்று பணி முடித்து விட்டதாகவும் அதற்கு மேற்படி மொத்த தொகையான ரூ.31,60,685/-ல், தனக்கு 2 சதவீதம் தொகை சுமார் ரூ.63,000/-மும், அலுவலக செலவு தொகைரூ.5000/- மும் சேர்த்து ரூ.68,000/-ஐ அவருக்கு தனியாக

கொடுக்குமாறு ஏற்கனவே கேட்டுக்கொண்டதின் பேரில் இன்று 04.07.2024 மாலையில் AEE அவர்களை சந்தித்து பணம் கொடுக்க அலுவலகம் வந்து, அங்கிருந்த AEE திரு.மோகன்பாபு அவர்களிடம் மேற்படி வேலை சம்மந்தமான விபரத்தினை M-Book-ஐ காண்பித்து சொல்லிக்கொண்டிருந்தபோது, திடீர் சோதனை குழுவினர் உள்ளே வந்து விசாரித்தபோது, மேற்படி பணம் ரூ.68,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். எனவே மேற்படி பணம். ரூ.68,000/-ஐ லஞ்சப்பணம் என்பதால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் ஆஜரில் இருந்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளாக ஆஜரில் இருந்த 12 நபர்களிடம் விசாரணை செய்ததில் AEE திரு.மோகன்பாபு அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக பணம் கொண்டுவந்ததாக பின்வரும் விபரங்கள் தெரியவந்தது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | கைப்பற்றப்பட்ட தொகை விபரம் |
|---|---|---|
| 1. | M.சந்தோஷ் (24/2024), த/பெ.மகாலிங்கம், 22 கல்யானசுந்தரம் வீதி, சாஸ்திரி நகர், ஈரோடு-2 | Rs.10,000/- |
| 2. | G.திலீப்குமார் (29/2024), த/பெ கோபால்சாமி, 36, கோட்டையன்காடு, துய்யம்பூந்துறை, அவல்பூந்துறை, ஈரோடு. | Rs.5,000/- |
| 3. | B.பாலமுருகன் (52/2024), த/பெ பொம்மையன், கூத்தனூர், ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம். | Rs.26,000/- |
| 4. | M.P.பாலசுப்பிரமணி (69 yrs) த/பெ பெரிய பொங்காளி செட்டியார், 11/6 சின்னஅக்ரகாரம்,பெரிய போஸ்ட் ஆபீஸ் பின்புறம், சத்தியமங்கலம். | Rs.7,000/- |
| 5. | S.செல்வராசு(52/2024), த/பெ.சுப்பிரமணியம், தண்ணீர்பந்தல்பாளையம், குருவரெட்டியூர், அந்தியூர் வட்டம். | Rs.50,000/- |
| 6. | V.K.அருணாசலம் (64/2024), த/பெ குப்பண்ணகவுண்டர், 2/158, வள்ளிபுரத்தான்பாளையம், வெள்ளோடு வழி, ஈரோடு மாவட்டம். | Rs.1,00,000/- |
| 7. | P.S.விஸ்வநாதன் (48/2024), த/பெ சிவலிங்கம், 7/30, பிச்சாண்டாம்பாளையம், பொலவக்காளிபாளையம் அஞ்சல், கோபி. | Rs.7,800/- |

| | | |
|---|---|---|
| 8. | R.ஆனந்தகுமார் (42/2024), த/பெ ராஜூ, ¼, தாண்டாக்கவுண்டன் பாளையம், தோரணவாவி அஞ்சல், பெருந்துறை வட்டம். | Rs.12,200/- |
| 9. | T.குமரவேல் (55/2024), த/பெ துளசிமணி, 57, தொட்டிபாளையம், வேலாங்காட்டு வலசு அஞ்சல், அவல்பூந்துறை வழி, ஈரோடு. | Rs.45,000/- |
| 10. | P.சதீஷ்குமார் (32/2024), த/பெ பழனிசாமி, 232, ராணா நகர், பவானி, ஈரோடு மாவட்டம். | Rs.80,000/- |
| 11. | S.ரவி (53/2024), த/பெ சாமியப்பன், 195, வள்ளிபுரத்தான்பாளையம், வி.வெள்ளோடு வழி, பெருந்துறை வட்டம். | Rs.10,500/- |
| 12. | P.குமார் (42/2024), த/பெ பழனிசாமி கவுண்டர் (லேட்), 4/5, பெரிச்சிபாளையம், தாண்டாம்பாளையம் அஞ்சல், சிவகிரி வழி, கொடுமுடி வட்டம், ஈரோடு மாவட்டம். | Rs.5,60,000/- |

மேற்படி தொகைகள், அவர்களால் தகுந்த முகாந்திரம் சொல்ல இயலாததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது மேற்படி எதிரி மற்றும் 13 ஒப்பந்தாரர்கள் / பிரதநிதிகள் ஆகிய 14 நபர்களிடமிருந்து மொத்தமாக ரூ.10,40,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது ஒரு அசல் பதிவேடு, சான்றொப்பம் செய்யப்பட்ட 4 கோப்புகள், பணம் வைக்கப்பட்டிருந்த 4 காக்கிநிற கவர்கள் மற்றும் ஒரு மெரூன் நிற பேக் ஆகியவைகள் விசாணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வு 04.07.2024-ம் தேதியில் மாலை சுமார் 18.00 மணிமுதல் இரவு சுமார் 23.45 மணி வரை நடைபெற்றது. இது சம்மந்தமாக நடவடிக்கை குறிப்பு அந்த அலுவலகத்திலேயே தயார் செய்யப்பட்டது. மேலும், இந்த திடீர் ஆய்வில் தயார் செய்யப்பட்ட நடவடிக்கை, கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.10,40,000/-, ஒரு அசல் பதிவேடு, சான்றொப்பம் செய்யப்பட்ட 4 கோப்புகள், பணம் வைக்கப்பட்டிருந்த 4 காக்கிநிற கவர்கள் மற்றும் ஒரு மெரூன் நிற பேக் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். எனவே, திரு.T.திரு.மோகன்பாபு, உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி துறை, கோபிசெட்டிபாளையம் வட்டாரம், பொறுப்பு ஈரோடு வட்டாரம் என்பவர் மீது தக்க

நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd xxxxx), (S.ஜெகதீசன்) இடம்: ஈரோடு. நாள் : 05.07.2024 இணைப்பு: துணை ஆய்வுக்குழு அலுவலரின் நடவடிக்கைகள் நாள்: 04.07.2024, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.10,40,000/- மற்றும் ஆவணங்கள்.

Sir,

Received the complaint on 05.07.2024 at 03.00 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Crime No.03/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018 on 05.07.2024 at 03.15 hrs (sd xxxxx), 05.07.2024 (G.Arumugam), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Erode.

Original FIR along with the original typed complaint and surprise check proceedings of Tr.S.Jagadesan, Deputy Inspection Cell Officer, Coimbatore, Erode, Thiruppur and the Nilgiris Districts, Coimbatore is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and copy of FIR submitted to Director, Vigilance and Anti-Corruption, Chennai.

5/7/2024

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.